## தம்புள்ள பிரதேச சபை

## மாத்தளை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களை போலவே முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்பித்திருக்கவில்லை. அத்துடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்விற்கான தலைமை அதிபதியின் ‘‘கொடுக்கல் வாங்கல்கள் தொழிற்பாட்டு செயலாற்றுகை பற்றிய கருத்துரைகள்’’ அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி, தம்புள்ள பிரதேச சபையின், சபைத்த தலைவருக்கு அனுப்பட்டுள்ளது.

1.2 கொடுக்கல் வாங்கல்கள் தொழிற்பாட்டு செயலாற்றுகை பற்றிய கருத்துரைகள்

--------------------------------------------------------------------------------------------------------------

1.2.1 முகாமைத்துவ திறமையின்மை

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தலைவருக்கு உத்தியோகபூர்வ வாகனம் ஒன்று மற்றும் எரிபொருள் வரையறை ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதற்கு மேலதிகமாக 2013 ஜூன் முதல் செப்டம்பர் வரை ரூபா 10,000 எரிபொருள் படி ஒன்றும் குறிப்பிட்ட காலத்தில் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக சபை நிதியத்தில் இருந்து எரிபொருளுக்காக ரூபா 70,902 உம், தலைவரின் பல்வேறு பிரயாணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட வாடகை வாகனங்களுக்காக ரூபா 93,000 உம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்ட 08 வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பிரதேச சபைக்கு சொந்தமான இலக்கம் 53 – 4734 கொண்ட கப் வண்டி தற்போது பயன்படுத்த இயலாத நிலைமையில் காணப்படுகின்றது எனினும் அதனை திருத்துவதற்கு அல்லது வேறு பொருத்தமான செயற்பாடு ஒன்றினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.2.2 ஒப்பந்த நிருவாகம்

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 185,492 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வில்கஹ ஜனசமூக நிலையத்தில் சதுர வலை அடித்திருந்த போதும் சனசமூக நிலையம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது என இடப்பரிசோதனையின் போது காணக்கூடியதாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 102,500 செலவில் அல்-ஜலாலியா விவசாய அமைப்பினால் வேவல வெலன்கொல்ல விளையாட்டுத் திடல் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. எனினும், பள்ளிக்கு சொந்தமான காணியின் உரிமை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் விளையாட்டு மைதானத்தில் காடுகள் வளர்ந்துள்ளமையால் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டதென இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது மகநெகும ஏற்பாடுகளின் கீழ் ரூபா 500,000 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு லெனதொர வடக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினால் லெனதொர வெந்தீஸி வத்தை கட்டம் 02 பாதையில் இணைத் தொடர் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது அச்கசுக் கற்கள் பதித்த பாதையில் கிடங்குகள் ஏற்பட்டிருந்ததெனவும் கற்கள் ஒரே சீரான மட்டத்தில் பதிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் காணக்கூடியதாக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 146,541 இற்கான செலவில் பெரகும் பொதும் எல விவசாய அமைப்பின் மூலம் களுந்தாவ பரணகம மஹவெவ பாதையை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

:- வேலை விடயம் இலக்கம் 01 இன் கீழ் பக்க வடிகால் வெட்டுவதற்காக ரூபா14,877 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆழத்தை விட பக்க வடிகால்களின் ஆழம் குறைவாகக் காணப்பட்டதெனவும்

:- வேலை விடயம் இலக்கம் 02 இன் கீழ் சரளை கற்கள் வழங்களுக்காக ரூபா 46,644 தொகை ஒன்று செலுத்தியிருந்த போதும் உரிய நியமங்கள் இன்றி சரளை கற்கள் பரப்பட்டிருந்தது எனவும்,

:- சாதாரண அளவிலான திரிகைக் கற்கள் போடப்பட்டிருந்தன எனவும், இடப் பரிசோதனையின் போது காணக்கூடியதாக இருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 200,000 செலவு ஒன்று மேற் கொள்ளப்பட்டு எகமுது விவசாய அமைப்பின் மூலம் திகம்பதஹ மாகல்லென விகாரைக்கு போகும் பாதை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது 1020 மீற்றர் துரத்திற்கு வடிகால் செய்யப்பட்டிருந்த போதும் பாதையின் இரு மருங்கிலும் ஒரே சீராக வடிகால்கள் வெட்டப்பட்டிருக்கவில்லை என இடப்பரிசோதனையின் போது காணக்கூடியதாக இருந்தது.

(ஊ) 2013 ஆண்டின் போது மாகாண சபை மந்திரி ஏற்பாடுகளின் கீழ் ரூபா 30,000 செலவில் ஸ்பிரே இயந்திரம் ஒன்று மற்றும் நீர் மோட்டார் ஒன்று சமன்தலாயாய பெலும் எல விவசாய அமைப்பிற்கு வழங்கியிருந்தது. சபையின் பதிவேடுகளின் பிரகாரம் 20 L பவர் ஸ்பிரே (எல்.பீ.எஸ் 777) இன் ஸ்பிரே இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்த போதும், சீ டெக் எக்ரோ இனத்தை சேர்ந்த ஸ்பிரே இயந்திரமொன்று வழங்கியிருந்ததென பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(எ) மீளாய்வாண்டிற்கான மகநெகும செயற்திட்டத்தின் கீழ் சபைக்குக் கிடைத்திருந்த ஏற்பாடுகளின் கீழ் தரையில் பதிக்கக் கூடிய கற்கள் செயற்திட்டமொன்றுக்காக பிரதேச சபையினால் கற்கள் உட்பட அனைத்து வேலைகளையும் உற்படுத்தி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது எனினும் பிரதேச சபையினால் ஒப்பந்தக்காரருக்கு அந்த வேலைக்காக நேரடியாக பணம் செலுத்தாமல் உடன்படிக்கையின் நிபந்தனைகளை விட்டு விலகி கொங்கிரீட் கற்கள் வழங்கியதற்காக 11 ஒப்பந்த வேலைகளுக்காக எதுகல ஹோல்டின்ஸ் (தனியார்) கம்பனிக்கு ரூபா 3,861,498 உம், 83 ஒப்பந்த வேலைகளுக்காக அரலிய இன்ஜினியர்ஸ் (தனியார்) கம்பனிக்கு ரூபா 26,136,000 உம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 2 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 2.1 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்

--------------------------------------------------------------

பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தம்புள்ள 40 மைல் வன காப்பு பிரதேசம், இனாமலுவ, கிபிஸ்ஸ மற்றும் சீகிரிய ஆகிய பிரதேசங்களில் நாளாந்தம் சேகரமாகும் குப்பைகளால் ஒரு வாரத்திற்கு இரு நாட்கள் சேகரிக்கப்பட்டு அந்த குப்பைகளை திகம்பதஹ தேக்கு வன காப்பு பிரதேசத்திற்கு முறைசாரா விதமாக போடப்படுகின்றது எனவும் நூலக

வளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையத்தை பயன்படுத்தி திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

2.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டின் மூலம் 04 செலவு விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 282,500 இற்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பாதீட்டின் மூலம் வீதவரி வருமானத் தலைப்பின் கீழ் ரூபா 255,000 வருமானம் ஒன்றினை உழைப்பதற்கு திட்டமிட்டிருந்த போதும் அவற்றை வருமானம் ஒன்றினையேனும் உழைப்பதற்கு முடியாதுள்ளதிருந்தது.

2.3 தீர்க்கப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

----------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதி வரை சபைக்கு சமர்பித்திருந்த கணக்காய்வு ஐயவினாக்களில் 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐயவினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 26,921,021 ஆகும்.

3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) வருமான நிருவாகம்

(இ) இன்வென்ட்ரி கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டு கட்டுப்பாடு